1987 மார்ச் 31] [திரு. வி. வி. சுவாமிநாதன்]

8. மேலும் ஊதியத்தை நிர்ணயிக்கும்போது குறைந்த பட்ச பயன் (minimum fixation benefit) நிர்ணயிப்பது பற்றியும் அரசு ஆலோசித்து வருகிறது.

9. இதனைத் தொடர்ந்து தற்போது முதுநிலை திருக்கோயில் பணியாளர்கள் போராட்டத்தை நிறுத்தி சுமுகமான முறையில் பணியாற்றுகின்றனர் என்ற விபரமும் தெரிவிக்கப்படுகிறது.

(உ) ஆதிதிராவிட மற்றும் பழங்குடி மாணவர்களுக்கான முன் தேர்வு பயிற்சி மையக் கட்டடத்தில் பழுது.

திரு. க. பாரமலை : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே, "நந்தனம், சென்னை-35-ல் இயங்கி வரும் ஐ.எ.எஸ்., ஐ.ஏ.எஸ். மற்றும் ஐ.பி.எஸ். பதவிகளுக்காக முன்தேர்வு பயிற்சி மையத்தில், வகுப்பு அறைகளும் விடுதியும், நிர்வாக அலுவலகமும் உள்ள கட்டடம் எந்த நேரமும் இடிந்து விழும் ஆபத்தான நிலையிருப்பது குறித்த" அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த நிகழ்வினை மாண்புமிகு ஆதிதிராவிடர் நலத்துறை அமைச்சரின் கவனத்திற்குக் கொண்டு வருகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, பேரவை முன் கீழ்க்கண்ட அறிக்கை ஒன்றை வைக்கிறேன் :

அறிக்கை.

ஆதி திராவிடர் மற்றும் பழங்குடி மாணவர்கள் ஐ.ஏ.எஸ். முதலிய தேர்வுகளை எழுதி வெற்றி பெற, தகுந்த பயிற்சி அளிப்பதற்காக, மாநில அரசு நடத்தி வரும், சென்னை முன் தேர்வு பயிற்சி மையம் தற்போது நந்தனத்தில், ஒரு தனியார் கட்டிடத்தில் உள்ளது. இம்மையத்தில் 60 மாணவர்கள் பயிற்சி பெறலாம் தற்பொழுது 46 மாணவர்களும் 6 மாணவிகளும் பயிற்சி பெற்று வருகின்றனர். மையம் தற்பொழுது உள்ள கட்டிடம் மிகவும் பாழடைந்த நிலையில் உள்ளதால், உயிருக்கும், சொத்துக்கும் ஆபத்து ஏற்பட வாய்ப்பு உள்ளது. கட்டிடச் சொந்தக்காரர் பழுது பார்க்கும் பணிகளைச் செய்ய முன்வரவில்லை. எனவே, அந்த மையத்தைத் தனியார் கட்டிடத்திலிருந்து வேறொரு இடத்திற்கு மாற்றுவது, தவிர்க்க முடியாத ஒன்றாகும். எனினும், மாற்று இடவசதி பெற இதுவரை எடுக்கப்பட்ட முயற்சிகள் பயன

[திரு. எ. அருணாசலம்] [1987 மார்ச் 31

ளிக்கவில்லை. மையத்திற்கு இடம் கோரி ஆதிதிராவிடர் நல இயக்குநர் செய்தித் தாள்களில் பிரசுரம் செய்தார். எனினும் அதுவும் பயன் அளிக்கவில்லை.

2. இப்பயிற்சி மையத்தினை உடனடியாக வேறு கட்டிடத்திற்கு மாற்ற, தற்போது அரசு தீவிர முயற்சிகள் மேற்கொண்டுள்ளது. விரைவில் மையம் வேறு இடத்திற்கு மாற்றப்படும்.

திரு. க. பாரமலை : மாண்புமிகு அவைத் தலைவர் அவர்களே. நம்முடைய அமைச்சர் அவர்கள் அளித்திருக்கின்ற விவர அறிக்கையில் அந்தக் கட்டிடம் நிச்சயமாகப் பழுதுபட்டு ஆபத்தான நிலையில் இருப்பதை ஒப்புக் கொண்டிருக்கிறார்கள். நான் அந்த இடத்தைப் போய்ப் பார்த்திருக்கிறேன். தேசத்தில் மிகப் பெரிய பதவிகளான ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். போன்ற பதவிகளுக்கு நம்முடைய இளைஞர்களைத் தயார் செய்கின்ற அந்த மையத்தின் கட்டிடம் மிகவும் மோசமாக இருப்பது மட்டும் அல்லாமல். துப்பறியும் நாவலில் வரும் பேய் மாளிகை போல் இருக்கிறது. எந்த இடத்தில் பார்த்தாலும் கட்டிடம் இடிந்து விழும் நிலையில் இருக்கிறது. அமைச்சர் அவர்கள், அந்த வீட்டு உரிமையாளர் ரிப்போ செய்ய மறுக்கிறார் என்று சொல்கிறார். ரிப்பேர் செய்ய முடியாது. ஒரு பகுதி இடிந்து, எந்த நேரம் வேண்டுமானாலும் எஞ்சியவை விழும் அபாய நிலை இருக்கிறது. நம்முடைய ஆதிதிராவிடர் நலத் துறை இயக்குநர் விளம்பரம் செய்திருக்கிறார்கள் எனினும் அதற்குப் பயன் இல்லை என்று சொல்கிறார்கள். ஒருவேளை, ஆதிதிராவிடர் நலத்துறை விளம்பரம் செய்ததால் அதற்குப் பயன் இல்லையோ என்ற அச்சம் ஏற்படுகிறது. ஆகவே மாவட்ட ஆட்சித் தலைவரை அணுகி, முறையாக ஒரு கட்டிடத்தைப் பெற்று, நல்ல atmosphere இருக்கக்கூடிய கட்டிடத்திற்கு அந்தப் பயிற்சி நிலையத்தை மாற்ற அரசு நடவடிக்கை எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்தக் கட்டிடம் உண்மையிலே பாதிக்கப்பட்டிருக்கிறது. கட்டிட உரிமையாளரிடம் சொல்லியும் அவர் ரிப்பேர் செய்யவில்லை. ஆனால் ஒவ்வொரு இடத்திலும் அதிகாரிகள் இடம் தேடுகின்ற நேரத்திலே கட்டிடம் கிடைக்க

வில்லை. இப்பொழுது மாண்புமிகு வீட்டு வசதித் துறை அமைச்சருக்கு ஒரு கோப்பு அனுப்பப்பட்டு இருக்கிறது. இன்னும் ஒரு வாரத்திற்குள் கட்டாயமாக அண்ணா நகர் பகுதியில் இருக்கிற அரசுக் கட்டிடத்தில் அந்த மையம் மாற்றப்படும் என்பதை இங்கே சொல்ல கடமைப்பட்டு இருக்கிறேன்.

திரு. க. பாரமலை: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒரு வாரத்திற்குள் மாற்றப்படும் என்று மாண்புமிகு அமைச்சர் அவர்கள் சொன்னதற்காக நன்றி தெரிவித்துக்கொள்கிறேன். அப்படி ஒருவேளை கிடைக்கவில்லையென்றால், நம்முடைய எம்.சி. ராஜா ஹாஸ்டலிலே summer vocation விடும்போது, அங்காவது இதை மாற்றிவிட்டு. சைதாப்பேட்டையில் பெருவழித் துறை மற்றும் பொதுப்பணித் துறைக்குச் சொந்தமான புறம்போக்கு நிலங்கள் அதிகமான அளவில் இருக்கின்றன என்று சொல்லப்படுகிறது. அந்த இடத்தைப் பெற்றாவது நிரந்தரமான கட்டிடம் கட்டுவதற்கும் ஏற்பாடு செய்யவேண்டும். இன்றைக்கிருக்கிற ஹாஸ்டலைப் பார்த்தால் ஹாஸ்டல் மாதிரி இல்லை. ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். தேர்வு எழுதக் கூடியவர்களுக்குத் தேவையான வசதிகள் செய்து தரப்படவில்லை. லைப்ரரி கிடையாது. அப்படிப்பட்ட வசதிகளையும் அமைக்கக்கூடிய அளவு புதிய கட்டிடத்தைக் கட்ட அரசு முயற்சி எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எ. அருணாசலம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அந்த மாணவர்கள் படிப்பதற்கு வசதியாக நிரந்தரமான ஒரு கட்டிடம் கட்டுவதற்கு அரசு ஆவன செய்து கொண்டிருக்கிறது. அதன்மீதும் நடவடிக்கை எடுத்து வருகிறது. குறிப்பிட்ட ஒரு வாரத்திற்குள் நான் குறிப்பிட்ட இடம் கிடைக்காவிட்டாலும், தனியாரிடம் கேட்டிருக்கிறோம். அதைப்போலவே அரசு வீட்டு வசதித் துறையிடம் கேட்டிருக்கிறோம். கட்டாயமாக அந்த இடம் மாற்றப்படும், அவர்களுக்கு வசதி செய்து கொடுக்கப்படும்.